செ.கு.எண்: 212 நாள்: 06-06-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 6.6.2012

---

தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உயர்த்த வேண்டும் என்ற உயரிய நோக்கில், அனைத்துத் துறைகளையும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல பல்வேறு முனைப்பான நடவடிக்கைகள் தமிழக மக்கள் நலன் கருதி நாளும் என்னால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு போக்குவரத்து முதுகெலும்பாக விளங்கி வருகிறது என்பதாலும், போக்குவரத்துத் தொழிலாளர்களும், பணியாளர்களும் ஊக்கமுடன் பணியாற்றி அவர்கள் வாழ்வில் வளம் கண்டு, தங்களது முழுத் திறனையும் வெளிப்படுத்தி சிறப்பாக பணியாற்ற வேண்டும் என்பதாலும் அவர்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

அவ்வகையில் தமிழகத்தில் இயங்கி வரும் எட்டு போக்குவரத்து கழகங்களில் பணி புரியும் அலுவலர்கள், தொழில் நுட்ப பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு வழங்கி வரும் அகவிலைப்படியை 1.1.2012 முதல் 58 சதவீதத்திலிருந்து 65 சதவீதமாக உயர்த்தி வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்.

இந்த அகவிலைப்படி உயர்வு போக்குவரத்து கழகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் பொருந்தும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த உயர்த்தப்பட்ட அகவிலைப்படி, நிலுவை இன்றி ரொக்கமாக 1.1.2012 முதல் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். இதன் காரணமாக அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு கூடுதலாக மாதம் ஒன்றுக்கு 10 கோடியே 55 லட்சம் ரூபாய் செலவாகும்.

இந்த அகவிலைப்படி உயர்வின் மூலம் போக்குவரத்துக் கழகங்களில் பணி புரியும் 1 லட்சத்து 19 ஆயிரத்து 764 பணியாளர்களும், 41 ஆயிரத்து 520 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களும் பயன் பெறுவர்.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள இந்த அகவிலைப்படி அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களும், பணியாளர்களும் மேலும் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் மக்கள் பணியாற்ற உத்வேகம் அளிக்கும் என நான் நம்புகிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9